


## பனை சாகுபடியை ஊக்குவிக்க

# ரூ.1 கோடியே 65 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ள முதல்வருக்கு நன்றி!

### எர்ணாவூர் ஏ.நாராயணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் !

சென்னை, ஏப். 01

சென்னை கோயம்பேடு சென்னை டீலக்ஸ் ஹோட்டலில் சமத்துவ மக்கள் கழக மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் கழகத்தின் நிறுவன தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் வேளாண் பட்ஜெட்டில் 2025 2026 ஆம் ஆண்டில் பனை சாகுபடியை ஊக்குவிக்க பத்து லட்சம் பனைவிதைகள், பனைமதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள், மதிப்பு கூட்டுதல் பயிற்சி ஆகிய இனங்களுக்கு பனை மேம்பாட்டு இயக்கத்தில் 1 கோடி 65 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என தமிழக அரசு பட்ஜெட்டில் அறிவித்ததற்கு நன்றி தெரிவித்து இந்தக் கூட்டத்தின் வாயிலாக பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒன்றிய அரசின் புதிய கல்வி கொள்கையில் இந்தி மொழியை கட்டாயமாக திணிக்க நினைக்கும் ஒன்றியஅரசுக்கு எதிராக முதல்வரின் வழிகாட்டுதலோடு தனது எதிர்ப்பை தெரிவித்து தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைக்கும் சமத்துவ மக்கள் கழகம் உறுதுணையாக இருக்கும் என கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப் படுகிறது.

பதநீர் இறக்கும் தொழிலாளர்களை காவல்துறையினர் விஷ சாராயம் வழக்கில் கைது செய்து வருவதை தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் பேரவை தலைவர் அவர்களுக்கும் கடிதம் மூலமாக தமிழ்நாடு பனைமர தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் எர்ணாவூர் நாராயணன் நேரில் சென்று வழங்கினார். அதன் பேரில் நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரில் கேள்வி நேரத்தில் பனை தொழிலாளர்கள் வாழ்வாதாரம் மற்றும் பனை மேம்பாட்டிற்கு ஆதரவாக பேசிய பேரவை தலைவர் அப்பாவு, சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அசோகன், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.மனோகர் ஆகியோருக்கு இக்கூட்டத்தின் பாராட்டுக்களையு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒன்றிய அரசு மக்களை வஞ்சிக்கும் வகையில் கூறிவரும் நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு சமத்துவ மக்கள் கழகம் உறுதுணையாக இருக்கும் எனவும், தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி செய்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியில் சமத்துவ மக்கள் கழகம் தனது வெற்றி பயணத்தை தொடரும் எனவும் கூட்டத்தின் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

பனை மரம் வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற வேண்டும், பனைமரம் ஏறுவதற்கு எவ்வித அனுமதியும் இல்லாமல் பனை வாரிய அடையாள அட்டை வைத்திருந்தால் போதுமென கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.




சென்னை தெற்கு மாவட்டம். மதுரவாயல் தெற்கு பகுதி வர்த்தகர் அணி சார்பில் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 720 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ராமாபுரம் 18 E பேரூந்து நிருத்தம் அருகில் பகுதி அமைப்பாளர் ஜி.இ.மகேஷ் ஏற்பாட்டில் மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் எஸ்.அருணாச்சலம், வ.செல்வக்குமார் எம்.சி.,. வி.ராஜேஷ். பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், கே.ராஜீ எம்.சி. கே.குமரன், எஸ்.மோகன், வி.வெங்கடேஷ், எம்.கிருஷ்ணன், வி.சுரேஷ், பி.இளங்கோ, பி.அருண்ராஜ், கே.சுரேன், எம்.பூமாலை, ஆர்.பிரபு, வி.ராஜேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

